ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ தந்தை காலில் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தந்தை காலில் ॥

திருக்கண்ணபுரம் - 5

‡தந்தை காலில் விலங்கற⋆ வந்து தோன்றிய
தோன்றல் பின்⋆ தமியேன் தன்
சிந்தை போயிற்றுத்⋆ திருவருள் அவனிடைப்
பெறும் அளவிருந்தேனை⋆
அந்தி காவலன் அமுதுறு பசுங்கதிர்⋆
அவைசுட அதனோடும்⋆
மந்த மாருதம் வன முலை தடவந்து⋆
வலிசெய்வதொழியாதே! (1)

மாரி மாக் கடல் வளைவணற்கிளையவன்⋆
வரை புரை திருமார்பில்⋆
தாரின் ஆசையில் போயின நெஞ்சமும்⋆
தாழ்ந்ததோர் துணை காணேன்⋆
ஊரும் துஞ்சிற்று உலகமும் துயின்றது⋆
ஒளியவன் விசும்பியங்கும்⋆
தேரும் போயிற்றுத் திசைகளும் மறைந்தன⋆
செய்வதொன்றறியேனே! (2)

ஆயன் மாயமே அன்றி மற்றென் கையில்⋆
வளைகளும் இறை நில்லா⋆
பேயின் ஆர் உயிர் உண்டிடும் பிள்ளை⋆ நம்
பெண்ணுயிர்க்கிரங்குமோ⋆
தூய மா மதிக் கதிர் சுடத் துணையில்லை⋆
இணை முலை வேகின்றதால்⋆
ஆயன் வேயினுக்கழிகின்றதுள்ளமும்⋆
அஞ்சேல் என்பார் இலையே! (3)

கயம் கொள் புண் தலைக் களிறுந்து வெந்திறல்⋆
    கழல் மன்னர் பெரும் போரில்⋆
மயங்க வெண் சங்கம் வாய்வைத்த மைந்தனும்⋆
    வந்திலன் மறி கடல் நீர்⋆
தயங்கு வெண் திரைத் திவலை நுண் பனியென்னும்⋆
    தழல் முகந்திள முலைமேல்⋆
இயங்கு மாருதம் விலங்கில் என் ஆவியை⋆
    எனக்கெனப் பெறலாமே! (4)

ஏழு மா மரம் துளைபடச் சிலைவளைத்து⋆
    இலங்கையை மலங்குவித்த
ஆழியான்⋆ நமக்கருளிய அருளொடும்⋆
    பகல் எல்லை கழிகின்றதால்⋆
தோழி! நாம் இதற்கென் செய்தும் துணையில்லை⋆
    சுடர் படு முதுநீரில்⋆
ஆழ ஆழ்கின்ற ஆவியை அடுவதோர்⋆
    அந்தி வந்தடைகின்றதே! (5)

முரியும் வெண் திரை முது கயம் தீப்பட⋆
    முழங்கழல் எரியம்பின்⋆
வரிகொள் வெஞ்சிலை வளைவித்த மைந்தனும்⋆
    வந்திலன் என் செய்கேன்⋆
எரியும் வெங்கதிர் துயின்றது⋆ பாவியேன்
    இணை நெடுங்கண் துயிலா⋆
கரிய நாழிகை ஊழியில் பெரியன⋆
    கழியும் ஆறறியேனே! (6)

கலங்க மாக்கடல் கடைந்தடைத்து⋆ இலங்கையர்
    கோனது வரையாகம்
மலங்க⋆ வெஞ்சமத்தடு சரம் துரந்த⋆ எம்
    அடிகளும் வாரானால்⋆
இலங்கு வெங்கதிர் இள மதி அதனொடும்⋆
    விடை மணியடும்⋆ ஆயன்

விலங்கல் வேயினதோசையுமாய்⋆ இனி
விளைவதொன்றறியேனே! (7)

முழுதிவ்வையகம் முறை கெட மறைதலும்⋆
முனிவனும் முனிவெய்த⋆
மழுவினால் மன்னர் ஆருயிர் வவ்விய⋆
மைந்தனும் வாரானால்⋆
ஒழுகு நுண் பனிக்கொடுங்கிய பேடையை⋆
அடங்க அஞ்சிறை கோலித்⋆
தழுவு நள்ளிருள் தனிமையின் கடியதோர்⋆
கொடு வினை அறியேனே! (8)

கனஞ்செய் மா மதிள் கணபுரத்தவனொடும்⋆
கனவினில் அவன் தந்த⋆
மனஞ்செய் இன்பம் வந்துள் புக வெள்கி⋆ என்
வளை நெக இருந்தேனை⋆
சினஞ்செய் மால் விடைச் சிறு மணி ஓசை⋆ என்
சிந்தையைச் சிந்துவிக்கும்⋆
அனந்தல் அன்றிலின் அரி குரல்⋆ பாவியேன்
ஆவியை அடுகின்றதே! (9)

‡வார் கொள் மென் முலை மடந்தையர்⋆ தடங்கடல்
வண்ணனைத் தாள் நயந்து⋆
ஆர்வத்தால் அவர் புலம்பிய புலம்பலை⋆
அறிந்து முன் உரைசெய்த⋆
கார் கொள் பைம் பொழில் மங்கையர் காவலன்⋆
கலிகன்றி ஒலி வல்லார்⋆
ஏர் கொள் வைகுந்த மாநகர் புக்கு⋆ இமை-
யவரொடும் கூடுவரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥